

ஈரோடு வடக்கு மாவட்ட திமுக செயலாளர் என்.நல்லசிவம், கோபி நகர செயலாளர் என்.ஆர்.நாகராஜ், நம்பியூர் ஒன்றிய பொறுப்பாளர் ப.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் கோபி, நம்பியூர் பகுதி அரசு பள்ளி மாணவ மாணவிகளுக்கு முகக்கவசம் மற்றும் கிரிமிநாசினி வழங்கினார்.



# அரூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் வளர்ச்சி பணிகளை விரைந்து முடிக்க கலெக்டர் திவ்யதர்சினி உத்தரவு

**தருமபுரி, செப். 4–**

தருமபுரி மாவட்டம், அரூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கலெக்டர் திவ்யதர்சினி அரூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஒன்றிய பொறியாளர்கள், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பணி மேற்பார்வையாளர்கள் உள்ளிட்ட வளர்ச்சி துறை அலுவலர்களுடன் அனைத்து வளர்ச்சித் திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டு, நிலுவையில் உள்ள அனைத்து வளர்ச்சித் திட்டப்பணிகளையும் விரைந்து முடித்திட வேண்டுமென அலுவலர்களுக்கு உத்திரவிட்டார்.

இதனை தொடர்ந்து, கலெக்டர் திவ்யதர்சினி அரூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கொக்கராப்பட்டி வார சந்தையில் ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் சந்தை மேம்பாட்டு பணியினையும், சேலம் திருப்பத்தூர் சாலையிலிருந்து திருவள்ளுவர் நகர் வழியாக எருமியாம்பட்டி பாலம் வரை ரூ.2.31 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் தார்சாலை அமைக்கப்பட்டு வரும் பணிகளையும் தல ஆய்வு செய்து, அனைத்து வளர்ச்சி திட்ட பணிகளையும் தரமாகவும், துரிதமாகவும், குறிப்பிட்ட கால அளவிற்குள் விரைந்து முடித்திட வேண்டுமென அலுவலர்களுக்கு உத்திரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, அரூர் ஊராட்சி ஒன்றிய மண்டல அலுவலர் என்.ஜெகதீஸ்குமார், அரூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெயராமன், தனபால், மொரப்பூர் உபகோட்ட உதவி செயற்பொறியாளர் பி.எம். ராமச்சந்திரன் உட்பட தொடர்புடைய அலுவலர்கள் உடன் இருந்தனர்.



## மேட்டுப்பாளையம்

# இரும்புகடை மார்க்கெட்டில் ரூ.5 கோடி ஆக்கிரமிப்பு நிலம் மீட்பு

**மேட்டுப்பாளையம், செப். 4–**

மேட்டுப்பாளையம் சிறுமுகை ரோட்டில் நகராட்சிக்கு உட்பட்ட 4வது வார்டில் பழைய மோட்டார் வாகன உதிரி பாகங்கள் விற்பனை கடைகள் உள்ளன.

இங்கு நகராட்சிக்கு சொந்தமான இடங்களை ஆக்கிரமிப்பு செய்திருப்பதாக நகராட்சி நிர்வாகத்திற்கு புகார் வந்தது.

மேட்டுப்பாளையம் நகராட்சி நிர்வாகம் ஆக்கிரமிப்பு நிலங்களை மீட்க அதிரடி நடவடிக்கை எடுத்தனர். நகராட்சி கமிஷனர் வினோத் தலைமையில் பொறியாளர் கவிதா, நகரமைப்பு அலுவலர் மீனாட்சி, வருவாய் ஆய்வாளர்கள் ராஜன், முரளி, சுகாதார ஆய்வாளர்கள் செந்தில்குமார், மணிகண்டன், ஆரோக்கியசாமி மற்றும் நகராட்சி பணியாளர்கள் கோவை நகர ஊரமைப்பு துறை மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்தில் உள்ள ஆவணங்களின் அளவின்படி நிலம் அளவீடு செய்து ஆக்கிரமிப்புக்கள் அகற்றப்பட்டன.

கமிஷனர் வினோத்திடம் உரிமையாளர்கள் நகராட்சி மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பை அகற்றும் பணிக்கு முழு ஒத்துழைப்பு தருகிறோம். ஆனால் முறையாக முன்னறிவிப்பு எதுவும் இல்லாமல் நீங்கள் பணியில் ஈடுபடுவது முறையல்ல என்று தெரிவித்தனர்.

### கமிஷனர் விளக்கம்

இதற்கு பதிலளித்த கமிஷனர், 15 நாட்களுக்கு முன்பே உரியவர்களுக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. சட்டப்படிதான் நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம். ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நகராட்சி இடங்களை மீட்பதில் நீங்கள் உறுதியாக உள்ளோம் என்று கூறினார்.

இதையடுத்து ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது. ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட நிலத்தை சுற்றி முள்கம்பிவேலி அமைக்கப்பட்டது. மொத்தம் 92 சென்ட் நிலம் மீட்கப்பட்டது.

இதன் தற்போதிய மதிப்பு ரூ.5 கோடி இருக்கும் என்று நகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர். மார்க்கெட்டில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டதையொட்டி மேட்டுப்பாளையம் காவல் ஆய்வாளர் சண்முகம் தலைமையில் உதவி ஆய்வாளர் தாமோதரன் மற்றும் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்தனர்.



# ஆத்தூர் போலீசாருக்கு மலையேற்ற பயிற்சி

**ஆத்தூர், செப். 4–**

ஆத்தூர் டிஎஸ்பி இமானுவேல் ஞானசேகர் தலைமையில் ஆத்தூர் ஊரக இன்ஸ்பெக்டர் ரஜினிகாந்த், ஆத்தூர் நகர சப்இன்ஸ்பெக்டர் மூர்த்தி மற்றும் 50 போலீசார் ஆத்தூர் அருகே முட்டல் நீர்வீழ்ச்சியில் அமைந்துள்ள மலைப்பகுதியில் மலையேறும் பயிற்சி செய்தனர்.

சுமார் 7 கிலோ மீட்டருக்கு மேலே நடந்து சென்று நடைப்பயிற்சி மேற்கொண்டனர்.

காவல்துறையினர் ஆரோக்கியத்துடன் இருப்பதற்காக இந்த நடைப்பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது.

வாரந்தோறும் ஆத்தூர் சுற்றுவட்டாரத்தில் உள்ள பகுதியில் உள்ள மலைகளில் மலையேறும் பயிற்சி நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.


தனேஜா ஏரோஸ்பேஸ் அன்ட் ஏவியேஷன் லிமிடெட்

பதிவு அலுவலகம்: பெலகொண்டபள்ளி கிராமம், தளி சாலை, தேன்கனிக்கோட்டை தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம், பெலகொண்டபள்ளி 635 114 (தமிழ்நாடு)
போன் : +91 4347 233 508 பேக்ஸ் : 01 4347 233 414;
மின்னஞ்சல் : secretarial@taal.co.in; இணையதளம் : www.taal.co.in;
CIN : L62200TZ1988PLC014460

**அறிவிப்பு**

கம்பெனிகள் சட்டம் 2013ன் (சட்டம்) பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகம் ('எம்சிஏ') வெளியிட்ட ஏப்ரல் 8, 2020, ஏப்ரல் 13, 2020 மற்றும் மே 5, 2020 மற்றும் ஜனவரி 13, 2021 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்கள்.14/2020, 17/2020 மற்றும் 20/2020 மற்றும் 02/2021 ஆகியவற்றுக்கு இணங்க, தனேஜா ஏரோஸ்பேஸ் அன்ட் ஏவியேஷன் லிமிடெட் (கம்பெனி) 32வது வருடாந்திர பொதுக் கூட்டம் (AGM) உறுப்பினர்கள் பொதுவான ஒரு இடத்தில் ஆஜராகாமல் செவ்வாய்க்கிழமை, செப்டம்பர் 28, 2021 அன்று காலை 11.30 மணிக்கு (இந்திய நேரப்படி) காணொலி காட்சி (VC)/பிற ஆடியோ காட்சி முறை (OAVM) மூலம் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

பொருந்தக்கூடிய மேற்கண்ட எம்சிஏ சுற்றறிக்கைகள் மற்றும் செபியின் மே 12, 2020 மற்றும் ஜனவரி 15, 2021 தேதியிட்ட சுற்றறிக்கையின் கீழ், வருடாந்திர பொது கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவற்றை காகித வடிவில் அனுப்பும் பணி கைவிடப்பட்டுள்ளது. மேலும் அவை கம்பெனியில் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு மின்னணு முறையில் அனுப்பப்பட்டு வருகிறது. தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத உறுப்பினர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்:

**1. காகித வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள்:**
உறுப்பினர்கள் தங்களின் போலியோ எண், மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு கம்பெனியின் ஆர்டிஏ பிக் ஷேர் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டின் மின்னஞ்சல் முகவரியான investor@bigshareonline.com அல்லது கம்பெனியின் மின்னஞ்சல் முகவரியான secretarial@taal.co.inக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

**2. மின்னணு வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள்:**
மின்னஞ்சல் முகவரி, மொபைல் எண் மற்றும் பிற விவரங்களைப் புதுப்பிக்க உறுப்பினர்கள் தங்கள் வைப்பு பங்கேற்பாளர்/ பங்கு தரகரைத் தொடர்பு கொள்ளவும்.

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவை கம்பெனியின் இணையதளம் www.taal.co.in மற்றும் பிஎஸ்இ இணையதளம் www.bseindia.com மற்றும் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்டின் ('CDSL') (காணொலி காட்சி வசதி மற்றும் மின்னணு வாக்களிப்பு வசதியை வழங்கும் முகவர்) www.evotingindia.comல் கிடைக்கும்.

வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மின்னணு வழிமுறையில் வாக்களிப்பதன் மூலம் அலுவல் பரிவர்த்தனை மேற்கொள்ளப்படும். வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்குபெற பங்குதாரர்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு மற்றும் காணொலி காட்சி வசதியை வழங்குவதற்காக கம்பெனி சிடிஎஸ்எல் சேவைகளைப் பெற்றுள்ளது. காணொலி காட்சி மற்றும் மின்னணு வாக்களிப்பு மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்பது பற்றிய விவரங்களுக்கு, வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பார்க்கவும். மின்னணு வாக்களிப்பு வசதி சனிக்கிழமை, செப்டம்பர் 25, 2021 அன்று இந்திய நேரப்படி காலை 9.00 மணிக்கு துவங்கி திங்கட்கிழமை, செப்டம்பர் 27, 2021 அன்று இந்திய நேரப்படி மாலை 5.00 மணிக்கு முடிவடைகிறது. மேற்கூறிய தேதி மற்றும் நேரத்திற்கு அப்பால் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அனுமதிக்கப்படாது. இந்த காலக்கட்டத்தில், கட் ஆப் தேதியில் அதாவது செப்டம்பர் 21, 2021 அன்று காகித/மின்னணு வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் மின்னணு முறையில் தங்கள் வாக்கை அளிக்கலாம். முன்பே தங்கள் வாக்குகளை அளிக்காமல் காணொலி காட்சி மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது சிடிஎஸ்எல் மின்னணு வாக்களிப்பு முறை மூலம் வாக்களிக்க தகுதியுடையவர்கள். அவர்களுக்கு எந்தவித தடையும் இல்லை. உறுப்பினர்கள் தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் தங்கள் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்திய பிறகும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்கலாம் ஆனால் வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பை அனுப்பிய பின்னர் கம்பெனியின் உறுப்பினர்களாகும் நபர்கள், மின்னணு வாக்களிப்பு மற்றும் காணொலி காட்சி மூலம் பங்கேற்கும் லாகின் ஐடியை investor@bigshareonline.com அல்லது secretarial@taal.co.inக்கு மின்னஞ்சல் அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு தொடர்பாக ஏதேனும் கேள்விகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அது குறித்து, www.evotingindia.comல் உதவிப் பிரிவில் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பிரிவு ('FAQs') மற்றும் மின்னணு வாக்களிப்பு பயனர் கையேட்டை பார்க்கவும் அல்லது helpdesk.evoting@cdslindia.comக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

தனேஜா ஏரோஸ்பேஸ் அன்ட் ஏவியேஷன் லிமிடெட்டிற்காக
இடம் : புனே — ஸ்ருதி ஜோப்
தேதி : செப்டம்பர் 3, 2021 — கம்பெனி செயலாளர்


# சத்குருவின் பிறந்த நாளையொட்டி 1.23 லட்சம் மரக்கன்றுகள் நடவு

**கோவை, செப். 4–**

ஈஷா அறக்கட்டளை நிறுவனர் சத்குருவின் பிறந்த நாளை முன்னிட்டும், நதிகள் மீட்பு இயக்கம் தொடங்கப்பட்ட செப்டம்பர் 3 ஆம் தேதியை 'நதிகளுக்கு புத்துயிரூட்டும் தின'மாகக் கருதியும் தமிழகம் முழுவதும் 'காவேரி கூக்குரல்' இயக்கம் சார்பாக விவசாயிகள் செப்டம்பர் 2,3 ஆகிய இரு தினங்களில் 1.23 லட்சம் மரக்கன்றுகளை நடவு செய்தனர்.

மரக்கன்றுகள் புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், அரியலூர், தர்மபுரி, சேலம், விருதுநகர், கன்னியாகுமரி, திருநெல்வேலி உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் உள்ள 485 ஏக்கர் பரப்பளவு கொண்ட விவசாய நிலங்களில் நடப்பட்டன.

இது தொடர்பாக காவேரி கூக்குரல் இயக்கத்தின் தமிழ்நாடு மாநில கள ஒருங்கிணைப்பாளர் தமிழ் மாறன் கூறுகையில், "காவேரி கூக்குரல் இயக்கம் சார்பாக தமிழகம் முழுவதும் உள்ள விவசாயிகளுடன் இணைந்து, செப்டம்பர் 2,3 ஆம் தேதிகளில் 1.23 லட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டன.

விவசாயிகளுக்கு பணப்பயன் தரக்கூடிய, மண்ணுக்கேற்ற டிம்பர் மரங்களான தேக்கு, வேங்கை, சந்தனம், செம்மரம், மலைவேம்பு, குமிழ் தேக்கு, கருமருது, மகாகனி போன்ற மரங்கள் நடவு செய்யப்பட்டன. இதில் மாநிலம் முழுவதும் உள்ள விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். இவர்களுக்கு தேவையான ஆலோசனைகளை காவேரி கூக்குரல் இயக்கத்தின் களப்பணியாளர்கள் வழங்கினர். விவசாய நிலங்களில் மண்ணுக்கேற்ற மரங்களை காவேரி கூக்குரல் இயக்கத்தின் களப்பணியாளர்கள் பரிந்துரை செய்தனர்" என்றார்.


# முதலீட்டாளர்களுக்கு நீண்டகால லாபம் அளிக்கும் திட்டம்: ஆக்ஸிஸ் மியூச்சுவல் பண்ட் அறிமுகம்

**கோவை, செப். 4–**

ஆக்ஸிஸ் மியூச்சுவல் பண்ட் நிறுவனம், அதன் புதிய மியூச்சுவல் பண்ட் திட்டமான ஆக்ஸிஸ் கன்சம்ஷன் இடிஎப்ஐ அறிமுகப்படுத்தி இருக்கிறது. இந்தப் புதிய பண்ட் வெளியீடு ஆகஸ்ட் 30ம் தேதி திங்கள் கிழமை தொடங்கியது. நுகர்வு கருத்தின் அடிப்படையிலான பங்குச் சந்தையில் வர்த்தகமாகும் பண்ட் இதுவாகும். இந்தப் புதிய பண்ட், நிப்டி இந்தியா நுகர்வு குறியீட்டில் இடம் பெற்றிருக்கும் நிறுவனப் பங்குகளில் முதலீடு செய்வது மூலம் நீண்ட காலத்தில் முதலீட்டில் செல்வம் உருவாக்கும் தீர்வுகள் மற்றும் லாபம் ஈட்டுவதற்கான இலக்கை கொண்டிருக்கிறது.

இந்த புதிய பண்ட் வெளியீட்டின் போது, ஆக்ஸிஸ் ஏஎம்சின் நிர்வாக இயக்குநர் மற்றும் முதன்மை செயல் அதிகாரி சந்திரேஷ் குமார் நிகம் கூறுகையில், ஆக்ஸிஸ் ஏஎம்சியில் நாங்கள் பொறுப்புள்ள மியூச்சுவல் பண்ட் நிறுவனமாக வலுவாக செயல்பட்டு வருகிறோம். நாங்கள் எங்கள் முதலீட்டாளர்களுக்கு பல்வேறு திட்டங்களை தரமாக அளித்து வருகிறோம். தற்போதைய சூழலில் நீண்ட கால வருமானத்தை கொடுக்கும் வகையில் இந்த பண்டை வழங்க முயற்சி செய்து வருகிறோம். ஆக்ஸிஸ் கன்சம்ஷன் இடிஎப் பண்டை அறிமுகப்படுத்துவது மூலம், எங்கள் முதலீட்டாளருக்கு வளர்ச்சி மற்றும் வலுவான வருமானத்திற்கான முதலீட்டு விருப்பத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

கடந்த சில தசாப்தங்களாக நுகர்வு சந்தை வலுவாக உள்ளது. இடையில் சற்று குறைவு ஏற்பட்டாலும் தொடர்ந்து வளர்ந்து வருகிறது. எங்கள் முதலீட்டாளர்கள் புள்ளி விவரங்களால் முழுமையாக உந்தப்படுகிறார்கள், பேசிவ் முதலீட்டின் எழுச்சியை நாம் தெளிவாகக் காண்பிப்பது முக்கியம். முதலீட்டாளர்களுக்கு ஆக்ஸிஸ் கன்சம்ஷன் இடிஎப் ஒரு நல்ல முதலீட்டு வாய்ப்பு என்று நான் நம்புகிறேன். அத்துடன் சந்தையில் ஒரு நிலையான மற்றும் நீண்டகால வளர்ச்சியைப் பெறும் என்றார்.



ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் முதன்மை வருவாய் அலுவலராக இரா.இராமநாதன் பொறுப்பேற்றுக்கொண்டார். இவர் இதற்கு முன் விருதுநகர் மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகத்தில் துணைப்பதிவாளர் மற்றும் பணியாளர் அலுவலராக பணியாற்றி பணிமாறுதலில் ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் துணைப்பதிவாளர், முதன்மை வருவாய் அலுவலராக பொறுப்பேற்று உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



கரூர் மாவட்டம், புகளூர் ஊராட்சி, கட்டிபாளையத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் நடத்தப்பட்ட சாதனை விளக்க புகைப்பட கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.


பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்

**கார்ப்பரேட் அலுவலகம்:** 4வது மாடி, பஜாஜ் பின்சர்வ் கார்ப்பரேட் அலுவலகம், புனே – அகமது நகர் சாலை அருகாமையில், விமான் நகர், புனே – 411 014.

**கிளை அலுவலகம்:** முதல் தளம், 104, எக்சலென்ஸ், ரேஸ் கோர்ஸ் சாலை, தாஜ் விவாந்தா அருகில், கோயம்புத்தூர் – 641 018

**கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம், 2002 பிரிவு 13(2)ன் கீழ் டிமாண்ட் நோட்டீஸ்**

கீழே கையொப்பமிட்டுள்ள M/s பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆகிய நான், கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்)/உடன்கடன்தாரர்(கள்) ஆகியோர் பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்டில் அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்கள் மீது வீட்டு கடன்(கள்)/கடன்(கள்) வாங்கி அவர்கள் அசல், வட்டி மற்றும் இதர கட்டணங்களை திரும்ப செலுத்த தவறியதால் அவர்களுக்கு கீழ்க்கண்ட அறிவிப்பினை அளித்துள்ளேன். இதன் விளைவாக கடன்கள் செயல்படாத சொத்துக்களாக (N.P.A.'s) உள்ளது. ஆகையால் அவர்களுக்கு 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம், 13(2)வது பிரிவு மற்றும் விதிகளின் கீழ் அறிவிப்புகள் கடைசியாக தெரிந்த அவர்களின் முகவரிக்கு அனுப்பப்பட்டது. எனினும் அவை வாங்கப்படாமல் திரும்ப வந்துவிட்டது. அவர்கள் பெற்ற கடன் வசதியின் கீழ் திரும்ப செலுத்த வேண்டிய நிலுவை தொகையை செலுத்தக் கோரி இந்த வெளியீட்டின் மூலம் கடன்தாரர்(கள்)/உடன்கடன்தாரர்(கள்) ஆகியோருக்கு தெரிவிக்கப்படுகிறது.

| கடன் கணக்கு எண்/கடன்தாரர்(கள்)/உடன்கடன்தாரர்(கள்)/ உத்தரவாததாரர்(கள்) பெயர், முகவரி | ஈடுபெற்ற/ அடமான அசையா சொத்து/ செயல்படுத்த வேண்டிய சொத்தின் முகவரி | டிமாண்ட் நோட்டீஸ் தேதி மற்றும் தொகை |
|---|---|---|
| (LAN No. 421LAP21045387)<br>1. S சுரேஷ் (கடன்தாரர்)<br>வசிப்பிடம் : 25, சிவராம் நகர், ராமநாதபுரம், கோயம்புத்தூர் – 641 045.<br>2. S மகேஸ்வரி (உடன் கடன்தாரர்)<br>வசிப்பிடம் : கதவு எண்.25, சிவராம் நகர், ராமநாதபுரம், வினாயகர் கோவில் அருகில், கோயம்புத்தூர் – 641 045. | **விவசாய நிலம் அல்லாத சொத்து மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்:** டி.எஸ்.எண்.1474, வார்டு எண்.2, 6வது டிவிஷன், மேலத் தெரு, பெருமாள் கோவில் தெரு, கரூர், தமிழ்நாடு 639 001<br>கிழக்கு : சாலை, மேற்கு : ராஜம்மாளுக்கு சொந்தமான சொத்து<br>வடக்கு : பொது சந்து, தெற்கு : ஆர். அப்பாவு மற்றும் திரு. ஏ. சாந்தாவுக்கு சொந்தமான சொத்து | 22 ஜூலை 2021<br>ரூ.2,42,91,976/–<br>(ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்திரெண்டு லட்சத்து தொன்னூற்றியோராயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தாறு மட்டும்) |

பெறப்படாத அறிவிப்புகளுக்கு மாற்று சேவையாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்)/உடன்கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) ஆகியோர் கோரப்பட்டுள்ள தொகை, மேலும் வட்டியை இந்த அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்கு திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு செலுத்த தவறும் பட்சத்தில் (எந்தவித பாரபட்சமும் இன்றி பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்டிற்கு உள்ள மற்ற சரியான தீர்வின்படி) 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம், பிரிவு 13(4)ன்படி ஈடுபெற்ற ஆஸ்திகள்/அடமான ஆஸ்திகளை சுவாதீனம் எடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட் வசமிருப்பதால் அவற்றை மாற்றவோ அல்லது மூன்றாவது பார்ட்டி உருவாக்குதல் போன்றவற்றை மேற்கொள்ளக்கூடாது என்று மேற்குறிப்பிடப்பட்டுள்ள பார்டிகள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**தேதி : 04.09.2021** — **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
**இடம் : கோயம்புத்தூர்** — **பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்**



ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்
CIN:U65990MH2010PTC240703
இணையதளம்: homefirstindia.com தொலைபேசி எண்.: 180030008425
இமெயில் ஐடி: loanfirst@homefirstindia.com

**பிரிவு 13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரராகிய நீங்கள் அட்டவணையில் குறிப்பிடப்படப்பட்டுள்ள சொத்தை அடமானம் வைத்ததன் மூலம் கடனைப் பெற்றுள்ளீர்கள். மேலும் கடன் ஒப்பந்தத்திற்காக கடன்தாரர்/இணை கடன்தாரர் என நீங்கள் கீழே குறிப்பிட்டுள்ளீர்கள். நீங்கள் வாங்கிய கடன் தொகையை திரும்ப செலுத்த தவறியதன் விளைவாக, 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் (சுருக்கமாக SARFAESI சட்டம்) உங்கள் கடன் கணக்கு 03/09/2021 அன்று செயல்படாத சொத்து என வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட் ஆகிய நாங்கள், நீங்கள் வழங்கிய முகவரிக்கு SARFAESI சட்டத்தின் பிரிவு 13 (13) மற்றும் பிரிவு13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டுள்ளோம். 03/09/2021 அன்று மேற்சொன்ன அறிவிப்புகள் வெளியிடப்பட்டது மற்றும் உங்களுக்கு அளிக்கப்பட்ட பல்வேறு கடன்களை திரும்ப செலுத்துவதிலிருந்து நீங்கள் தவறிவிட்டீர்கள் என்று மேற்சொன்ன அறிவிப்புகளில் கூறப்பட்டுள்ளது. எனவே, SARFAESI சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 3(1)ன்படி அறிவிப்பு வழங்குவதற்காக தற்போதைய வெளியீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| வ. எண் | இடம் | கணக்கு, கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்) பெயர் மற்றும் முகவரி | செயல்படுத்தப்பட வேண்டிய பத்திரங்களின் விவரங்கள் | கோரிக்கை அறிவிப்பு தேதியன்று பாக்கித் தொகை மற்றும் மேலும் வட்டி, இதர செலவினங்கள் (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | K சூஜய் | பிளாட் எண்.304, வரிசை 3 பிளாக் B, கார்டன் சிட்டி, எஸ்.எப்.எண். 251/1, 252/1B, 253/1, 254, 257, 258, 259/2 & 260/2, வேடப்பட்டி கிராமம், நாகராஜபுரம் - பேரூர் சாலை, கோவை மாவட்டம், தமிழ்நாடு - 641007 | 8,70,180 |
| 2 | ஈரோடு | மறைந்த வில்லியம் காலின்ஸ் (இறந்து விட்டார்), விஜயா வில்லியம் காலின்ஸ் மற்றும் வில்லியன் காலின்சின் சட்ட பிரதிநிதிகள் | கதவு எண்.7, ஆர்.எஸ்எப் எண்.219/4,5, புதிய எஸ்எப் எண்.624/5 பகுதி, வார்டு எண்.11, ஞானாபிஷேகம் சாலை, பிராமின் பெரிய அக்ரஹாரம், பெரிய சேமூர் கிராமம், ஈரோடு தாலுக்கா, ஈரோடு, தமிழ்நாடு 638 005 | 2,73,903 |
| 3 | திருப்பூர் | ராஜேந்திரன் R, வசந்தபூபதி R | வீட்டு எண். 46, எஸ்எப் எண்.39/2A1, மனை எண்.46, நாரணாபுரம் கிராமம், பல்லடம் வட்டம் & சார் பதிவு அலுவலகம், திருப்பூர், தமிழ்நாடு 641664 | 14,49,624 |
| 4 | திருப்பூர் | மாதவன் P, ராணி M | மனை எண்..49 மேற்கு பகுதி, மகாலட்சுமி நகர், முத்தனம்பாளையம் கிராமம், திருப்பூர் தாலுகா, திருப்பூர் மாவட்டம், தமிழ்நாடு 641606 | 12,34,286 |
| 5 | திருப்பூர் | வெங்கடேஷ் நாராயணசாமி, சரவணன் நாராயணசாமி, பூங்கொடி சரவணன், குப்புலட்சுமி மது | எஸ்.எப்.எண். 511/3, மன்னரை கிராமம், திருப்பூர் தாலுக்கா, இணை 2 சார் பதிவு அலுவலகம், திருப்பூர், தமிழ்நாடு 641 607 | 15,68,884 |

ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டிற்கு செலுத்த வேண்டிய மேற்கூறிய தொகை மற்றும் வட்டியை இந்த அறிவிப்பை வெளியிட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்த நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். அவ்வாறு செலுத்த தவறும்பட்சத்தில் கடன்தாரர்கள், அடமானதாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்களின் ஈடுபெற்ற சொத்துக்களை சுவாதீனம் எடுத்தல் உள்பட ஏதாவது அல்லது அனைத்து ஈடுபெற்ற சொத்துகளுக்கு எதிராக சட்டத்தின் கீழ் தேவையான நடவடிக்கையை ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட் மேற்கொள்ளும். (1) குத்தகை மூலம் மாற்றுவதற்கான உரிமைகள், ஈடுபெற்ற சொத்துக்களை விடுவிக்க விற்பனை ஒதுக்கீடு உள்பட கடன்தாரர்கள்/உத்தரவாதாரர்களின் ஈடுபெற்ற சொத்துக்களை சுவாதீனம் எடுத்துக் கொள்ளும் உரிமை (2) குத்தகை, ஒதுக்கீடு அல்லது விற்பனை மற்றும் ஈடுபெற்ற சொத்துக்களை விடுவித்தல் மற்றும் உங்களால் மாற்றப்பட்ட ஈடுபெற்ற சொத்துக்கள் தொடர்பான அனைத்து உரிமைகள் கொண்டு ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டினால் ஈடுபெற்ற சொத்துக்களை மாற்றுதல் உள்பட ஈடுபெற்ற சொத்துக்களின் நிர்வாகத்தை எடுத்துக் கொள்ளுதல் போன்றவற்றை உள்ளடக்கி நடவடிக்கை மேற்கொள்ள மேற்சொன்ன சட்டத்தின் கீழ் ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டிற்கு உரிமை உள்ளது.

மேற்சொன்ன சட்டப்பிரிவு 13(13)ன்படி, ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டின் முன் அனுமதியின்றி ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டில் அடமானம் வைக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்டுள்ள எந்த ஒரு ஈடுபெற்ற ஆஸ்திகளை விற்பனை செய்தல், குத்தகைக்கு விடுதல் அல்லது இதர வகையில் வர்த்தகம் மேற்கொள்வதன் மூலம் (உங்கள் வணிகத்தின் சாதாரண போக்கைத் தவிர) மாற்றல் போன்றவற்றை மேற்கொள்ள உங்களுக்கு இதன் மூலம் தடை விதிக்கப்பட்டுள்ளது.

**இடம்: கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர்** — **கையொப்பம்: அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
**தேதி: 04/09/2021** — **ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்**